**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 57 /2022</u>**

பெயர் : கிட்டப்பா P.W.1.

த/பெ. : கோவிந்தசாமி

தேதி : 24.07.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை:</u> –**

1. நான் இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நீர் பாசன வசதி இல்லாததால் குத்தகை தொகையை குறைக்க சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் 5 ம் வகுப்ப வரை படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் தெரியாது. பிராதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் ரூபாய் 48,545/– குத்தகை பாக்கி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. 27.04.2022ம் தேதி 3ம் பிரதவாதி எனக்கு கொடுத்த ஏல அறிவிப்பில் மேற்படி பகுதி குத்தகை பாக்கியை தராத காரணத்தினால் ஏலத்தின் மூலம் அதை நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளபட்டது என்றால் சரியல்ல.

2. வாசாஆ 2 ஆன ஆவணத்தில் உள்ள பகுதி ரசீதுகள் 3ம் பிரதிவாதி கோவிலுக்கு செலுத்தப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் மேற்படி குத்தகை பாக்கியை நான் ஆன்லைன் மூலம் செலுத்திவிட்டேன் என்றால் சரிதான். நான் கோவில் விதிமுறைகளுக்கு மாறாக வருடம் தோறும் செலுத்த வேண்டிய குத்தகையை நிலுவையில் வைத்து கட்டிவந்ததால் 3ம் பிரதிவாதியின் மூலம் வாசாஆ 1 அனுப்பி குத்தகை நெல் முழுவதையும் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ள வேண்டி அறிவிப்பு அனுப்பியும் தாங்கள் குத்தகை பாக்கி செலுத்தவில்லை என்றால் சரியல்ல.

3. நான் 1960ம் ஆண்டு முதல் எனது தகப்பனார் கோவிலுக்க பகுதி செலுத்திவந்தார். ஆரம்ப காலத்தில் தாவா சொத்தின் குத்தகைதாரராக எனது தகப்பனார் பெயர் தான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்து 58 வருடங்கள் ஆகிறது. எனது தாயார் பெயர் ஜானகியம்மாள். அவர் 30 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். எனது உடன் பிறந்தவர்கள் சாரதாம்பாள் ஆவார். அவர் 15 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். அவருக்கு திருமணம் ஆகி குழந்தைகள் உள்ளது என்றால் சரிதான். சாரதாம்பாள் என்பவரின் கணவர் பெயர் சுப்ரமணியன் ஆகும். அவர் 20 வருடத்திற்கு முன்னர் இறந்துவிட்டார். சாரதாம்பாளுக்கு பழனி என்ற மகன் உள்ளார். அவர் ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார்.

4. இந்த வழக்கிற்கு பின்னிட்டு 3ம் பிரதிவாதி கோவிலுக்கு இழப்பீட்டு தொகையாக எவ்வளவு செலுத்தினேன் என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் கூற இயலும். நான் கோவில் விதிமுறைகளை சரிவர பின்பற்றாமல் கோவில் ஏல அறிவிப்பின் நடைமுறைகளை பின்பற்றாமலும் அத்துமீறி நாளது தேதி வரை தாவா சொத்திலிருந்து வெளியேறாமல் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**